Registered as a Newspaper

விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
1987 O/L
மீட்டல் வினு - விடை
வகுப்புகள்
ஆரம்பமாகியுள்ளன.
KOBII INSTITUTE
அம்மன் வீதி, கந்தர்மடம்
திங்கள், வெள்ளி
மாலை 6-00 மணி
ALBA INSTITUTE
கல்வியங்காடு
சனி, ஞாயிறு 2-30 மணி

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

விஞ்ஞானம்
இரா செல்வவடிவேல்
1987 O/L
மீட்டல் வினு - விடை
வகுப்புகள்
ஆரம்பமாகியுள்ளன.
YARL HALL
93, MAIN STREET,
JAFFNA.
செவ்வாய், வியாழன்-
காலை 7-00 மணி

சுடர் 2: யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு புரட்டாதி மீ 04 உ. ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 25 (20 – 09 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 254

உண்ணுவிரதத்தை கைவிடக் கோரும்

# இந்தியாவின் வேண்டுகோள் நிராகரிப்பு

## கோரிக்கைகள் குறித்து உறுதிமொழி எதுவுமில்லை

யாழ்ப்பாணம், செப் 20

திலீபனின் சாகும் வரை உண்ணுவிரதத்தை நிறுத்துவது சம்பந்தமாகப் பேசுவதற்கு கொழும்பில் உள்ள இந்தியப் பிரதித் தூதுவர் நேற்றுப் பலாலி வந்தார். புலிகள் பிரதிநிதிகளுக்கும் அவருக்கும் இடையில் பேச்சு நடந்தது ஆனால் வெற்றி அளிக்கவில்லை.

ஐந்து அம்சக் கோரிக்கை குறித்து இந்தியப் பிரதித் தூதுவரால் எவ்வித உறுதிமொழியும் வழங்கப்படவில்லை. அதனால் உண்ணுவிரதத்தைக் கைவிடுமாறு இந்தியத் தரப்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை புலிகள் நிராகரித்தனர்.

இதுசம்பந்தமாகப் புலிகள் தரப்பில் விடுக்கப்பட்ட அறிக்கை வருமாறு:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் திலீபனின் மரண நோன்பைக் கைவிடுமாறும், வெகுசனப் போராட்டத்தை நிறுத்துமாறும் இந்திய பிரதித் தூதுவர் திரு. சென் மூலமாக இந்திய அரசு விடுத்த கோரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் சம்பந்தமாக எந்தவித உருப்படியான உறுதிப்பாடுகளையும் இந்திய அரசு கொடுக்கத் தவறியது காரணமாகவே விடுதலைப்புலிகள் இந்தியாவின் வேண்டுகோளை ஏற்க மறுத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு சிறீ (மாத்தயா), அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகிய இருவரும் கொழு

(6ஆம் பக்கம் பார்க்க)



நல்லைக் கந்தன் ஆலயப் பகுதியில் சாகும் வரை உண்ணுவிரதம் இருந்துவரும் திலீபனுக்கு ஆதரவாக இரு பெண்கள் சாகும்வரை உண்ணுவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். அச்சுவேலியைச்சேர்ந்த சிவாதுரையப்பா [வயது 54] பல்கலைக்கழக மாணவி குசசாந்தினி ஆகியோரே இந்த இருவரும் ஆவர். இவர்கள் உண்ணுவிரதம் இருப்பதை படங்களில் காணலாம்.

(படம்: ஜெயம்) (இ)



இயக்கங்களுக்கு இடையிலான

# மோதல்களுக்கு 'ரோ' காரணம்

## பிரபா குற்றச்சாட்டு

## புலிகளை அழிப்பதே அதன் நோக்கம் என்கிறார்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 20

**இந்திய உளவு ஏஜென்ஸியின் 'ரோ' தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயக்கங்களுக்கு இடையேயான மோதல்களைத் தூண்டி விடுகின்றது.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே. பிரபாகரன் முன்கண்டவாறு குற்றஞ் சாட்டினார்.**

பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் திரு. பிரபாகரன் இக்குற்றச்சாட்டை சுமத்தினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் சுமத்திய கண்டனம் குறித்து திரு. பிரபாகரன் சொன்னதாவது;

சமூக விரோத சக்திகளுக்குப் பயிற்சி அளித்து அவர்களை நிராயுதபாணிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயல்பட வைப்பதில் 'ரோ' ஆற்றும் கட்டமான பங்கு, இந்திய வெளியுறவு அமைச்சுக்கு பூரணமாகத் தெரிந்த ஒன்றே.

தமிழ் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் கொலை

(6 ஆம் பக்கம் பார்க்க)



புலோலி பொலீஸ் நிலையத்துக்குச் சொந்தமான ஜீப்பையே படத்தில் காண்கிறீர்கள். சடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற மறியல் போராட்டத்தின் போது பொதுமக்களால் இந்த ஜீப் எரிக்கப்பட்டது எரிந்த ஜீப்பை சிலர் பார்வையிடுகின்றனர். (படம் : பா. ரகுநாதன்) (ஓ-118)

அநுராதபுரச் சந்திச் சம்பவம்:

## இறந்தோர் மற்றும் காயம் அடைந்தோர் விவரம

யாழ்ப்பாணம் செப். 20

வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அநுராதபுரச் சந்தியில் வைத்து கொல்லப்பட்ட, படுகாயப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் பெயர் விவரம் வருமாறு:-

கொல்லப்பட்டவர்களுள் நால்வரின் பெயர்கள்:-

1. கோல்டன் கிங்ஸ்லி ஜோர்ச்– அன்புவழிபுரம்
2. எம். ஜெகநாதன் அன்புவழிபுரம்
3. கனகராஜா யோசேஸ்வரன் – பாலையூற்று
4. கந்தையா கனகரத்தினம் - பாலையூற்று

காயமடைந்தவர்கள்:-

1. வேலு நடராஜன்
2 யூலியட் நிசாந்தினி
2 யோகநாதன்
4. மோகனதாஸ்
5. வலன்ரின்
6 கிங்ஸ்லி குமார்
7. நேமிதாசன்
8. வரதராஜன்
9. சணேஸ்
10. ஜோக்கின்பைக்சல்
11 வி. வரதராஜன்
12· இ நளினி
13 கு வரதராஜன்
14. கே. சந்திரகுமார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனை வாடிவீட்டில் இந்திய வீரர்

கல்முனை, செப். 20

கல்முனையில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக இந்திய சமாதானப் படையினர் பெரும் எண்ணிக்கையில் வந்து கல்முனை வாடி வீட்டில் முகாமிட்டுள்ளனர்

டாங்கிகளும் மூன்று இங்கு வந்து இரவு பகலாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றன.

இது இவ்விதமிருக்க ஒந்தாச்சிமடத்தில் உள்ள இந்தியசமாதானப்படை முகாமுக்கு மேலும் பல பீரங்கி வாகனங்களும் லொறிகளும் வந்துசேர்ந்துள்ளன. [இ-84]

## திலீபன் உண்ணுவிரதம் நேற்று 5ஆம் நாள்

யாழ்ப்பாணம், செப். 20

திலீபனின் உடல் நிலை நேற்று ஐந்தாவது நாளாக மிக மோசமான கட்டத்தை அடைந்திருந்தது.

படுத்த படுக்கையாகவே கிடந்த திலீபன் தன்னைப் பார்வையிட வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு சைகை மூலம் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

திலீபனின் நாடித் துடிப்பு வெகு வேகமாகக் குறைந்து வருவதாக இவரைப் பரிசோதித்த வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர் [இ-10]

## திலீபனுக்கு ஆதரவாக போராட்டங்கள் தொடர்கின்றன

யாழ்ப்பாணம், செப் 20

திலீபனின் உண்ணுவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ் நகர் எங்கும் மறியல் போராட்டங்களும் உண்ணுவிரதப் போராட்டங்களும் நடத்தப்பட்டன.

யாழ் நகரில் உள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன

வாகன சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இதேவேளை குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தி நல்லூர் வரை வந்துசேர்ந்தனர் [இ-10

### 6 மணி நேரம் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, செப் 20

திருகோணமலை மாவட்டத்தில் இன்று காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு, நண்பகல் 12 மணிக்கு மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்படும். இப்படி இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை திருகோண

(6 ஆ பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் முன்னேற்றம்

### டிக்ஸிற் சொல்கிறார்

கொழும்பு, செப் 20

மாகாண சபைக்கான அதிகாரப் பரவலாக்கல் பற்றி கொழும்பில் இந்திய, இலங்கை அதிகாரிகளுக்கு இடையே நடைபெறும் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது

இந்திய அரசக்குழுவுக்குத் தலைமை வகிக்கும் இந்தியத் தூதர் டிக்ஸிற் 'முன்னேற்றம் காணப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

நேற்றுப் பேச்சுக்கள் நடைபெறவில்லை.

இன்று ஞாயிறு, இரண்டு அரசுகளின் குழுக்களும் கூடி உடன்பாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஈரோஸ் அறிக்கை:

## இயக்க மோதல்களுக்குள் எம்மை இழுக்கவும் வேண்டாம் இலக்குத் தவறிப் போகவும் வேண்டாம்

யாழ்ப்பாணம், செப் 20

இயக்க மோதல்களுக்குள் எம்மை இழுக்கவும் வேண்டாம். இலக்குத் தவறிப்போகவும் வேண்டாம்— என்ற தலைப்பில் ஈரோஸ் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:

மக்களிடையே இயக்கப்பணிக்காக நிராயுதபாணிகளாக மனித நேயத்திலும் இயக்கங்களின் தோழமையிலும் நம்பிக்கைவைத்து செயற்படும் எமது தோழர் சிலருக்கு இன்னல்கள் விளைவிக்கப்பட்டதையிட்டு நாம் பெரிதும் விசனப்படுகின்றோம்.

வவுனியா, ஓமந்தை வீதியில் கடந்த 6ஆம் திகதி கடத்தப்பட்ட எமது தோழர்களான விஜி, வரன், பகிந்தன், கரன் ஆகியோர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

எங்கள் மேல் சீற்றம் கொள்ள எவருக்கும் எந்தக் காரணமும் இல்லை. நாங்கள் எந்த இயக்கத்திற்கும் தனியாகவோ, கூட்டாகவோ எவ்வித நாசமும் விளைவித்ததில்லை. தேசிய விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் ஏனைய சக்திகளோடு ஏதோவகையில் ஐக்கியம், புரிந்துணர்வு அவசியம் என்ற வகையில் செயற்பட்டோம். இயக்க மோதல்களில் நாம் ஈடுபடாமல் அவற்றைக் கண்டித்தே வந்துள்ளோம்.

சகலருடைய தியாகங்களையும் மதிக்கும் நாம்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

20-09-1987
புரட்டாதி 04
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9 02முதல் 10.32வரை
ராகுகாலம்:-
4.32முதல் 6 02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

முச்சந்திமுரளி



முன்னேற்றம் என்டு தான் நெடுகச் சொல்லுகினம் ஆனால் நடைமுறையில எல்லாம் பின்னேற்றம் அடைஞ்சு கொண்டல்லோ போகுது..........!

## திருமலையில் 200 பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 20

திருகோணமலையில் நேற்று ஊரடங்கு நேரத்தில் 200 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் பெரிய பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ)

## கரடியிடம் சிக்கிய விவசாயிக்கு ஏற்பட்ட பயங்கரம்

### கண்களை இழந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், செப். 20

வேட்டைக்குச் சென்ற போது கரடி தாக்கியதால் ஒருவர் கண்கள் இரண்டையும் இழந்தார்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நெடுங்கேணி, காஞ்சுரமோட்டையைச் சேர்ந்த பொன்னையா பாலேந்திரன் என்பவர் இன்னும் இருவருடன் நெடுங்கேணி, காட்டுப் பூவரசங் குளத்துக்கு வேட்டைக்குச் சென்றார்.

நடுக்காட்டில் கரடிக் குட்டி ஒன்றின் காட்டுக் கூச்சல் செவிடாக்கும் அளவுக்கு பயங்கரமாகக் கேட்டது.

கரடிக்குட்டியை சிறுத்தைப் புலி பிடித்து விட்டதே கூச்சலுக்கான காரணம் என பின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் கைகளில் வளரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ் சிறு விளம்பரம்**

**தேவை**

ஒட்டுவேலையும், கம்மாலை வேலையும் தெரிந்தவர்கள் தேவை. மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். உடனே நேரில் வரவும். பருத்தித்துறை பழைய D. R. O. பணிமனைக்கு அருகாமையில். (1693)

**காணவில்லை**

T 20028 இலக்கம் கொண்ட உஷா தையல் மிசினை யாராவது கண்டால் உடனடியாக பன்வீர்ச்செல்வன் 36/11 பீ. ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை என்ற விலாசத்துக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(1689)

**விற்பனைக்கு**

சட்டுடையில் 6பரப்புக் காணியும் சகல வசதிகள் கொண்ட 5 அறைகள் உடைய வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. வில்வராயர், கட்டுடை, மானிப்பாய்.

(1685)

ஒவ்வொரு வீட்டிலும் உலகத் தமிழர் குரல் ஒலிக்கட்டும். பிரதி ஒன்றின் விலை பத்து ரூபா மட்டுமே தொடர்புகள் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம், இலங்கைக் கிளை, 67, புகையிரத நிலையவீதி, யாழ்ப்பாணம்.

(1698)


## காங்கேசன் களஞ்சியத்தில்
# 400 மெட்ரிக் தொன் மா மூடைகள் சேதம்

யாழ்ப்பாணம், செப். 20

காங்கேசன் துறை களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப் பட்டிருக்கும் 400 மெட்ரிக் தொன் (6 ஆயிரம் மூடை) மா பழுதடைந்து விட்டதாக அறியவருகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுபற்றி உத்தியோக பூர்வமாக மேலிடத்துக்கு அறிவிக்கவிருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

பழுதடைந்த மாவின் பெறுமதி சுமார் 36 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

காங்கேசன் துறைக் களஞ்சியப் பகுதியில் இராணுவக் கெடுபிடி நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு முன்னரும், நடைபெற்ற காலத்திலும் இந்த மா களஞ்சியப் படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஒன்பது மாத காலத்துக்கு மேல் இந்த மூடைகள் களஞ்சியத்தில் தேங்கிக் கிடந்திருக்கின்றன.

சாதாரணமாக மா மூடைகளின் களஞ்சிய கால எல்லை 2 மாதங்களே எனச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, களஞ்சியப்படுத்தப்பட்ட மா மூடைகள் அவை களஞ்சியப் படுத்தப்பட்ட ஒழுங்கில் விநியோகிக்கப்படாதது மா மூடைகள் தேங்கிப் பழுதடைந்ததற்கு ஒரு காரணம் எனத் தெரிய வருகிறது

(இ-உ)

## கிளிநொச்சியில்
# சந்தை, பஸ் நிலையம் பழைய இடங்களில்

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சியில் தற்காலிகமாக இயங்கி வந்த சந்தை, பஸ்நிலையம் என்பன மூடப்பட்டு மீண்டும் பழைய இடங்களுக்கு இடம் மாற்றப் பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டி வீதியில் கந்தசாமி கோவிலுக்கு அருகில் அமைந்திருந்த தற்காலிகசந்தை, தற்காலிக பஸ் தரிப்பு நிலையம் என்பனவே மூடப்பட்டு கிளிநொச்சியில் 1977 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட சந்தை கட்டத்திற்கு சந்தையும், கண்டி வீதியில் கச்சேரி முன்பாகவிருக்கும் இடத்திற்கு பஸ் நிலையமும் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை சந்தை மேற்படி இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள போதும் இச்சந்தைக்கு மக்கள் செல்லும் வடக்கு வீதி இலங்கை இராணுவத்தினரால் தற்போதும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இதனால் சகல மக்களும் தெற்குப்பக்க வீதிக்கு சுற்றி வந்தே சந்தைக்கு செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். (ஒ-76)

## ஈழவர் முன்னணி வேதனை தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், செப் 20

அண்மையில் வடக்கு கிழக்கு ம் காணங்களில் இடம் பெற்ற சம்பவங்களில் போராளிகள், பொதுமக்கள், பொதுத் துறையினர் உட்பட 150க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டது குறித்து ஈழவர் முன்னணி தனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துள்ளது.

இவற்றுக்குக் காரணமானவர்களைக் கண்டிக்கும் அதேவேளையில் இத்தகைய செயல்கள் எக்காரணம் கொண்டும் இனியும் தொடராஎன்று நம்புகிறோம்.

இப்படி ஈழவர் முன்னணி மேலும் தெரிவித்துள்ளது. (இ

# பருத்தித்துறையிலும் போலியோ நோய்

தாளையடி, செப். 20

பருத்தித்துறை கிழக்கிலும் 'போலியோ' நோய் குழந்தைகளுக்குப் பரவி வருவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சுகாதார திணைக்களம் 'போலியோ' நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை இப் பகுதியில் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

பருத்தித்துறை கிழக்கில் உள்ள செம்பியன் பற்று என்னுமிடத்திலுள்ள ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்றுக்கு 'போலியோ'நோய் பரவியுள்ளது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

'போலியோ'நோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தை யாழ் வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றது.

சுகாதாரதிணைக்களம், பருத்தித்துறை கிழக்கில் ஏழுவயதிற்குட்பட்டுள்ள குழந்தைகளுக்கு 'போலியோ' நோய்த் தடுப்பு மருந்தினை கிராமம் கிராமமாகச் சென்று வழங்கிவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது

(ஒ-144)


R, No. 1514

# வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

**கல்வியாண்டு 1988/89**

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- **கலைமாணி** B. A.
- **விஞ்ஞானமாணி** (புள்ளிவிபரவியல்) B. Sc.
- **வணிகமாணி** B Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் அண்மையில் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25-9-87**

**விரிவுரைகள் 26 . 9 . 87ல் ஆரம்பமாகின்றன**

உதவிப்பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மாணவர் கவனத்திற்கு:-

M, A., Ph D. பட்டம் பெற்ற பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரே நிறுவனம் யாழ். நகரில் இதுவே.


## கோப்பாயில் வழிமறிப்பு

கோப்பாய், செப். 20

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்பாகவும் தபாற் சந்தோர் முன்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து வழி மறிப்புப் போராட்டம் நடைபெற்றது. (இ-ரி)

## நவராத்திரி விழா

சாவகச்சேரி, செப். 20

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் எதிர் வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 2. 10. 87. வெள்ளிக்கிழமை வரை நவராத்திரி விழா நடைபெறவிருக்கிறது. (ஒ-31)

# முஸ்லிம் மாகாண சபை சாத்தியமற்ற ஒன்றாகும்
## முன்னாள் பொத்துவில் எம். பி. கூறுகிறார்

அரசியல் தூரதிருஷ்டியும், தீர்க்கதரிசனமும் அனுபவமுதிர்ச்சியும் இல்லாதவர்கள் தான் தனி முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கையை முன் வைக்கின்றனர். முஸ்லிம் மாகாணசபை சாத்தியமற்ற ஒன்றாகும்.

இஸ்லாமிய அரசியல் நடவடிக்கை முன்னணியில் தலைவரும், முன்னாள் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜனுப். எம். ஏ. எம். ஜலால்தீன் மேற்கண்டவாறு கூறினார்.

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த அட்டாளைச்சேனை கோணவத்தைப் பகுதியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் கட்சி என்ற போர்வையில் இன்று சிலர் இனவாத அடிப்படையில் மக்களைப் பிரித்து இனவெறியை ஊட்டிவருகின்றனர்.

இதற்குக் கருவாக முஸ்லிம் மாகாணசபைக் கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்து வருகின்றனர்.

ஆனால் இந்தக் கோரிக்கை சாத்தியமானதா என்பதையும் அது கிடைக்கக் கூடியதா என்பதையும் உணரத் தவறி விட்டனர்.

தற்காலிகமாக இணையவிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களுக்கு மிகக்கூடிய உரிமைகளையும், சலுகைகளையும், பிரதிநிதித்துவங்களையும் பெற்று ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்;

# இலக்கியப் பேரவையின்
## விருதுகளும் பரிசில்களும்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். இலக்கியவட்டம் ''இலங்கை இலக்கியப் பேரவை'' என்ற அமைப்பினை நிறுவி வருடந்தோறும் நாடளாவிய ரீதியில் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கு விருதுகளும் பரிசுகளும் வழங்கி வருகின்றது.

இந்தவகையில் 85 ஆம் 86ஆம் ஆண்டுகளில் வெளிவந்த ஈழத்து இலக்கிய ஆக்கங்களில் சிறந்தனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றுக்கு இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழாவில் பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படும்.

பரிசுகளுக்கும் விருதுகளுக்கும் உரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்களின் விவரம் வருமாறு:-

இலக்கிய ஆய்வு நூலுக்கான விருதினையும் பரிசினையும் சி. வன்னியகுலம் எழுதிய ''ஈழத்துப் புனைகதைகளின் பேச்சு வழக்கு'' பெறுகிறது.

விருதினை திரு. திருமதி சண்முகதாஸின் ''இத்தி மரத்தான்'' பெறுகிறது.

நாவலுக்கான விருதினையும் பரிசினையும் சொக்கனின் ''சலதி'' பெறுகிறது.

சிறுகதைத் தொகுதிக்கான விருதினையும் பரிசினையும் அ. செ. முருகானந்தனின் 'மனிதமாடு' பெறப் பின்வரும் தொகுதிகள் விருதினைப் பெறுகின்றன.

''அந்நிய விருந்தாளி'' —க. பாலசுந்தரம்.

''மருதூர் கொத்தன் கதைகள்''—மருதூர்க் கொத்தன்.

''ஆகுதி''—சோமகாந்தன்.

காவியத்துக்கான விருதினையும் பரிசினையும் காரை சுந்தரம்பிள்ளையின் ''பாதைமாறிய போது'', ம. பார்வதிநாதசிவத்தின் ''இரண்டு வரம் வேண்டும்'' என்பவை பெறுகின்றன.

கவிதைத் தொகுதிக்கான விருதினையும் பரிசினையும் கல்வயல் வே. குமாரசாமியின் ''மரண நனவுகள்'' பெறுகின்றது.

நாடகத் தொகுதிக்கான விருதினையும் பரிசினையும் இ. முருகையனின் ''வெறியாட்டு'' பெறுகின்றது.

சிறுவர் இலக்கியத்துக்கான விருதினையும் பரிசினையும் பா. சத்தியசீலனின் ''கப்பல்'' பெறுகிறது. (ஒ-இ)


# முக்கிய அறிவித்தல்
## மின் விநியோகத் தடை

அவசர பராமரிப்பு பணிகளை முன்னிட்டு கீழ்க்காணும் பிரதேசங்களில் இன்று 1987ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை மின்சாரம் இடைநிறுத்தி வைக்கப்படும் என்பதை மின்நுகர்வோர் தயை கூர்ந்து கவனத்திற்கு எடுக்குமாறு அறிவிக்கப்படுகின்றது.

**துண்டிக்கப்படும் பிரதேசங்கள்**

சுன்னாகம், காங்கேசன்துறை, வேலணை, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை போன்ற இடங்கள் அடங்கிய யாழ் பிரதேசம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்.

இலங்கை மின்சார சபை,
யாழ் பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.


# ஆங்கிலக் கல்வி மிக அவசியமானது
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 20

பாலர் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தையும் ஒரு கட்டாய பாடமாகப் பாடசாலைகளில் கற்பிக்க வேண்டும். தற்போது பன்னிரண்டு சதவிதமான மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுகின்றார்கள். எனவே போதிய அளவு ஆங்கில அறிவு இருந்தால்தான் வெளிநாட்டுப் பரீட்சைகளில் சித்தியடைந்து, தங்கள் கல்வித்தரத்தை உயர்த்த முடியும்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக இரசாயனவியல் துறைத்தலைவரும், பேராசிரியருமான கலாநிதி க. பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரியின் வருடாந்த ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய திருமதி எல். பி. ஜெயவீரசிங்கம், பெற்றோரை விழிப்புணர்வோடு இருந்து ஆசிரியர்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் நாடி, மாணவ, மாணவியர்களை நேரிய பாதையில் நடத்திச் செல்லுமாறு ஆலோசனை கூறினார்.

வணக்கத்துக்குரிய சாம். டி. ஹோசிங்டன் பரிசளிப்பு வைபவத்திற்குத் தலைமைவகித்தார்.

திருமதி எ. பாலசுப்பிரமணியம் பரிசில்களை வழங்கினார்.

தொடர்ந்து பாடசாலை மாணவிகளின் பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றன. (இ)

# படுகொலைக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை
## புலிகளின் பிராந்திய அமைப்பாளர்

மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு பகுதிகளில் நடந்த படுகொலைகளுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. தமிழ்பேசும் மக்களால் நிராகரிக்கப்பட்ட மாற்று இயக்கங்கள் தான் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் அமைதியைக் குலைத்து வருகின்றன.

— இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு— அம்பாறை பிராந்திய அரசியல்பிரிவு அமைப்பாளர் திரு. இரா. பிரான்சிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எமது இயக்க போராளிகளான நிருபன், சோதி ஆகியோர் கடத்தப்பட்டுள்ளார்கள்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராடிய நாம் தற்போது மிக நிதானத்துடன் நடந்து கொள்கின்றோம். எமது புனிதப் போரின் தர்மம் எமக்கு உறுதுணையாக நிற்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு — என்று உள்ளது. (அ-21)

# பெண்மைக்கு உயர்வு கொடுக்கும் காவியம்

யாழ்ப்பாணம், செப். 20

''சாகுந்தல காவியம் பெண்மைக்கு உயர்வு கொடுக்கும் உன்னதமான காவியமாகும்''

சம்பந்தன் அவர்களின் சாகுந்தல காவிய நூல் வெளியீட்டு விழாவில் விமர்சன உரை ஆற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற் கண்டவாறு கூறினார்.

கடந்த வார இறுதியில் யாழ் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி கோபாலகிருஷ்ணன், திரு. க. உமாமகேஸ்வரன் இலக்கண வித்தகர் நமசிவாயம் உட்படப் பலர் உரையாற்றினர்.

வெளியீட்டுரை ஆற்றிய புத்தொளி ந. சிவபாதம் ''இன்றைய தலைமுறையினர் சம்பந்தனை நன்கு அறியாமல் இருக்கிறார்கள். அவரைப் பற்றிய அவரது ஆக்கங்களைப் பற்றிய விரிவான விமர்சனம் இன்னும் எழுதப்படவில்லை.'' என்று கூறினார்.

விழாவுக்கு திரு. சிவபாதசுந்தரம் தலைமை வகித்தார். (இ-கு)

## சுட்டுக் கொலை!

கொழும்பு, செப். 20

அக்மீமன பொலீஸ் பகுதியில் பத்தகம என்னுமிடத்தில் செவ்வாய் இரவு நடைபெற்ற மோதல் ஒன்றில் பொலீஸ்கொமாண்டோ ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பத்தகம காடுகளில் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கி பயிற்சி பெறுகின்றனர் என்று பொலீஸாருக்கு தகவல் ஒன்று கிடைத்தது.

அதைத் தொடர்ந்து பொலீஸ் கொமாண்டோப்படை காட்டின் மத்தியில் இருந்த வீடு ஒன்றை முற்றுகையிட்டது.

அப்போது இடம் பெற்ற துப்பாக்கி மோதலில் பண்டா (வயது 24) [illegible] பொலீஸ்கொமாண்டோ [illegible] (அ-எ)

# யாழ்ப்பாணத்தில்
## பிரிட்டிஷ் கவுன்ஸில் நூலகம்

கொழும்பு, செப். 20

யாழ்ப்பாணத்திலும் பிரிட்டிஷ் கவுன்ஸில் நூலகம் நிறுவப்படும்.

பிரிட்டிஷ் தூதர் திரு. ஏ. டி. எஸ். கிளாஸ்டன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கொழும்புப் பொது நூலகத்தில் நூலகக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

திரு. கிளாஸ்டன் மேலும் சொன்னதாவது:

அண்மையில் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். [illegible] நூலகம் எரிக்கப்பட்ட வேதனை நிகழ்ச்சியை அறிந்தேன்.

இதுபோன்ற வேதனைச் சம்பவங்கள் வருங்காலத்தில் ஏற்படாது மக்கள் நூலகங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

பிரிட்டிஷ் கவுன்ஸிலின் இரண்டு நூலகங்கள் இலங்கையில் கண்டியிலும் கொழும்பிலும் இயங்குகின்றன.

மூன்றாவது நூலகத்தை யாழ்ப்பாணத்தில்திறந்து வைக்க இருக்கின்றேன்.

இப்படி பிரிட்டிஷ் தூதர் கிளாஸ்டன் தெரிவித்தார். (இ-எ)


# VACANCIES

Vacancies exist in our Branch Offices in Jaffna and Kilinochchi for the following Posts.

**(1) ACCOUNTS CLERKS:**

Applicants should be energ:tic persons under 30 years of age and possess the G.G.E (O/L) with a minimum of 2-3 years experience as an Accounts Clerk in a reputed organisation.

Applicants should have a good working knowledge in English.

**(2) SALES PROMOTION OFFICERS**

Applicants should possess a good general education, be fluent in English and Tamil and b-low 35 yeras of age with a minimum of 5 years experience in sales. The job involves marketing of a range of internationally reputed praducts which includes Welding Equipment, Diesel Engines, Generators, Weighing Equipment, Agricultural & Domestic Pumps and General Engineering Hardware.

**(3) SALESMEN:**

Applicants should possess a good genaral education and below 30 years of age and have a good knowledge of selling Light Engineering and Hardware Products with a minimum of 2-3 years exp:rience in sales.

**(4) STENOGRAPHER:**

Applicants] should have a good knowledge of Office routines and below 30 years. Candidates with a knowledge of accounts and minimum two years experi-nce would be preferred.

Please apply with full bio-data, copies of certificates and names of two nonrelated referees on or before 30th September. 1987 to:-

The Area Manager,
Jaffna Branch,
SAMUEL, SONS & CO. LTD.
208, Hospital Road.
Jaffna.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




எமது நிரூபிக்கப்பட்ட உறுதி



எமது நிதி நிலைமை அறிக்கையை பார்த்தவுடனேயே எம்முடன் முதலிடு செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்று நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள்,

எமது வளர்ச்சி வேகமே எமது உறுதியான நிலைப்பாட்டிற்கு அத்தாட்சியாகும் வங்கித்துறையில் 20 வருடத்திற்கு மேல் அனுபவம் பெற்ற ஆளணியினரைக் கொண்டுள்ள எமது நிர்வாகம் உங்களுக்குத் தேவையான நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் அளிக்கும். எந்தவொரு வங்கியைப போலவும் எமது தொழிலும் கடன் கொடுத்தலும் நிதி வசதி செய்து கொடுத்தலுமேயாகும்.

இதில் பிரதானமானது நிதி வசதி செய்துகொடுத்தலே, எமது வைப்பாளர்களுக்கு சிறந்த கண்ணியமான, உடனுக்குடன் சேவை வழங்குவதே எமது சிறப்பாகும், இதனால் தான் நாங்கள் முதலீட்டு துறைகளில் உங்கள் உற்ற நண்பனாகவும் இருந்து வருகிறோம்.

## வைப்புச் சான்றிதழ்த் திட்டம்

| காலம் | சான்றிதழின் விலை | வட்டி வீதம் வருடத்துக்கு | முதிர்வு சான்றிதழின பெறுமதி |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 4,619/- | 16½% | 5,000/- |
| | 9,238/- | | 10,000/- |
| | 46,190/- | | 50,000/- |
| | 92,379/- | | 100,000/- |
| 12 மாதங்கள் | 4,220/- | 18½% | 5,000/- |
| | 8,439/- | | 10,000/- |
| | 42,195/- | | 50,000/- |
| | 84,389/- | | 100,000/- |
| 24 மாதங்கள் | 3,547/- | 20½% | 5,000/- |
| | 7,093/- | | 10,000/- |
| | 35,461/- | | 50,000/- |
| | 70,922/- | | 100,000/- |
| 36 மாதங்கள் | 2,986/- | 22½% | 5,000/- |
| | 5,971/- | | 10,000/- |
| | 29,851/- | | 50,000/- |
| | 59,702/- | | 100,000/- |

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 14 % |
| 6 மாதங்கள் | — | 16 % |
| 12 மாதங்கள் | 16 % | 18 % |
| 24 மாதங்கள் | 18 % | 20% |
| 36 மாதங்கள் | 20% | 22% |


## வியாபாரத்தின் முக்கிய நிலைகள்

- எல்லாவகையான வாகனங்களும் வாடகைக் கொள்வனவு முதலீடு,
- வாகனங்கள் குத்தகை நிதிவசதி,
- வர்த்தக இறக்குமதிக் கடன்,
- இறக்குமதி ஏற்றுமதி,
- குறுகிய வர்த்தகக் கடன்கள்
- வாக்குறுதிக் கடன்கள்

## நிறுவனத்தின் நிதி நிலை விவரம்

| | 1984/85 | 1985/86 | 1986/87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,383,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970 366 | 100 577,492 |
| வங்கிக்கடன்கள் | 1 791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4 386,271 | 16,206,897 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்துமுன் லாபம் | 5 783.720 | 9,878,026 | 19 310,887 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827 514 | 8.505,201 | 16,880,875 |
| வரி செலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356 206 | 1.372,825 | 2.330.012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

31-3-1987 மொத்த ஆஸ்திகள் ரூபாய் 14 கோடிக்கு மேல்




### இயக்குநர்கள்

L. P. F. கருணாரத்தின.
சட்டத்தரணி J. P. U. M. (தலைவர்)
S. பாலசுப்பிரமணியம்
A. I. B (Lon) (நிர்வாக இயக்குநர்)
I. D. நவரத்தினம் A. I. B (Lon)
(இயக்குநர் பொதுமுகாமையாளர்)
O. L. A. M. பாரி B.A. (Hons)
R. பாலசுப்பிரமணியம்
கூட்டிணைக்கப்பட்ட திகதி:- 29 - 9 - 1978

# உங்கள் நலனே எமது குறிக்கோள்

மேலதிக விபரங்களுக்கு

# யூனிக்கோ பினான்ஸ் லிமிட்

இலங்கை நிதி நிறுவன சங்கத்தின் அங்கத்துவ நிறுவனம
மத்திய வங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்
61. பௌத்தலோக மாவத்தை கொழும்பு 4
தொலைபேசி: 589310, 500576    தந்தி: UNISHAF

யாழ் முகவர் :-
207, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டத்துக்கு ஆதரவு

வட்டுக்கோட்டை, செப். 20

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன் மேற்கொண்டுள்ள "சாகும் வரை உண்ணாவிரதம்" என்பதற்கு ஆதரவு நல்கும் வகையில் வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, சுழிபுரம், அராலி, மூளாய் ஆகிய பகுதிகளில் மறியல், வழிமறிப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள், அரசஅலுவலகங்கள், கடைகள், தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள் அனைத்தும் இயங்காதிருந்தன.

இங்குள்ள வீதிகள் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. (இ-161)

## காரைநகரில் குடிதண்ணீர் பிரச்சினை

யாழ்ப்பாணம், செப். 20

காரைநகர் குழாய் நீர் விநியோகம் கடந்த சில நாட்களாகத் தடைப்பட்டுள்ளதால் அங்கு மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த நிலையில் பிரபல கல்லூரிஒன்றின் மாணவ மாணவிகளும் குடிதண்ணீருக்காக அயலில் உள்ள வீடுகளுக்கு படையெடுக்கிறார்கள்.

அத்துடன் அக்கல்லூரி ஒரு நேரப் பாடசாலையாக இயங்குவதற்கும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு காரணம் என அறியப்படுகிறது. இந்நிலை குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ)

## தமிழ் - முஸ்லிம் கிராம எல்லைப் பகுதி ரோந்து வேலை தொடங்கின்றது

மட்டக்களப்பு, செப். 20

கல்முனையில் தமிழ் — முஸ்லிம் கிராமங்களின் எல்லையில் இலங்கை-இந்தியப் படையினர் மறு அறிவித்தல் வரும்வரை தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

இத்தீர்மானம் கல்முனை பொலீஸ் நிலையத்தில் நடைபெற்ற மாநாட்டில் எடுக்கப்பட்டது.

இம்மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, பொலீஸ்மா அதிபர் திரு. சிறில் கேரத், இந்திய சமாதான படைத்தளபதி ஜெனரல் ஹரிகித் சிங், நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூர் ஆகியோர் உட்பட தமிழ் — முஸ்லிம் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

இக்கலவரம் தொடர்பாக ஒருசிலர் தமிழ்ப் போராளிகள் பின்னணியாகச் செயல்பட்டனர் எனக் குற்றஞ் சுமத்தினர்.

இதனைக் கல்முனைப் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஆ. வேல்முருகு ஏற்றுமுடியாத கருத்து எனக் கூறி விளக்கமளித்தார். (இ-21)

## பாடசாலைகளை திருத்த ரூ. 21 லட்சம் ஒதுக்கீடு

பலாலி, செப். 20

யாழ். மாவட்டத்தில் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை அவசரமாகப் புனரமைப்பதற்கு 21 லட்சத்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சில் இருந்து 20 லட்சம் ரூபாவும், கல்வி அமைச்சில் இருந்து 25 ஆயிரம் ரூபாவும், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பாடசாலை ஒதுக்கீட்டிலிருந்து 90 ஆயிரம் ரூபாவும் பாதிப்புற்ற பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப் படவுள்ளது.

மிகப் பாதிப்புற்ற பாடசாலை ஒன்றிற்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் பெறுமதியான அரைநிரந்தரக் கட்டடம் அமைத்து உடனடியாக அவற்றில் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளதாக யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம் மன்சூர் தெரிவித்தார். (ஒ-119)

## வரட்சியால் நோய் பரவும் அபாயம்

தாளையடி, செப். 20

கடும் வரட்சியினை அடுத்து பருத்தித்துறை கிழக்கில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிக்காணப் படுகின்றது.

கிணறுகளில் நீர் மிகக் குறைவடைந்து சேற்று நீரே காணப்படுவதனால், அனேக் குடிப்பேருக்கு வயிற்றோட்ட நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (ஒ-144)

## சிவாச்சாரியர்களைப் பாராட்டி கௌரவிக்க வேண்டும்

### பட்டமளிப்பு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, செப். 20

"எங்கள் கோயில்களில் சேவை செய்யும் சிவாச்சாரியர்களை நாம் என்றும் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும். சிவாச்சாரியர்களை ஊக்குவித்து, கல்வி கேள்விகளில் ஈடுபடச் செய்து, அவர்களுடைய சேவையைச் சிறப்பிக்கச் செய்ய இவ்வாறான கௌரவ நிகழ்ச்சிகள் பெரிதும் உதவும் என்றே நான் நம்புகின்றேன்.

பிரம்மஸ்ரீ சா. ஜெகதீஸ்வரசர்மா வேதம் ஓதுவதிலே முதன்மை பெற்றுச் சிறந்து விளங்குவதைப் பாராட்டிக் கௌரவித்து "சாகித்திய சங்கரர்" என்னும் பட்டம் வழங்கியபோது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தின் சார்பிலும் வட்டுக்கோட்டைகிழக்கு இந்து இளைஞர் சார்பிலும் பிரம்மஸ்ரீ சா. ஜெகதீஸ்வர சர்மாவுக்கு "சாகித்திய சங்கரர்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெற்ற விழாவில்திரு க. அருணாசலம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

எமது கோயில்களில் சிறந்த தொண்டாற்றி வரும் சிவாச்சாரியார்களுக்கு போதிய வசதிகள் செய்து கொடுப்பதோடு அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பது எமது கடமையாகும் — என்றார்.

புன்னாலைக்கட்டுவன் பிரமஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் இவ்விழாவில் பேசும்போது; கோவிலில் சேவை செய்யும் சிவாச்சாரியர்களைக் கௌரவிப்பது வரவேற்கவேண்டிய விடயமாகும் என்று கூறினார். (ஒ-161)

## செப்டெம்பர் 17 பல பிரமுகர்களது பிறந்த நாள் --பிரதமர்

கொழும்பு, செப். 20

மரம் நாட்டும் இயக்கத்தைப் பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸா கடந்தவியாழன் விகாரமகாதேவி பூங்காவில் தொடக்கி வைத்தார்.

அப்போது பிரதமர் பேசுகையில் சொன்னதாவது:

"இன்று தனித்துவமான நாள் செப்டம்பர் மாதமும் தனித்துவம் நிறைந்த மாதம்.

பருவப் பெயர்ச்சி மழை இம்மாதத்தில் தான் ஆரம்பமாகின்றது.

தேசிய, சமய சுதந்திரத்துக்கு வித்திட்டவர் வண. அநகாரிக தர்மபால தேரர். அவர் பிறந்தது இம்மாதம் 17ஆம் திகதி. நாட்டின் வளர்ச்சியைப் பெருக்கப் பாடுபட்டவர் பிரபல தொழிலியலாளர் டி.ஜே.விமலதரேந்திரா. அவர் பிறந்ததும் இத்திகதியிலே தான்.

எங்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தன பிறந்ததும் இத்திகதியிலேயே.

மரம் நாட்டும் இயக்கம் மனித வளர்ச்சிக்கு மட்டுமல்ல, சூழல்வளர்ச்சிக்கும் உதவுகின்றது"

இப்படிப் பிரதமர் சொன்னார். (அ-எ)

## விடுதலையானவர் மீண்டும் கைது!

யாழ்ப்பாணம், செப் 20

பூஸா தடுப்பு முகாமில் இருந்து கடந்த ஒருவரத்துக்கு முன்னர் விடுதலையான முஸ்லிம் இளைஞர் கலீல் புதனன்று மீண்டும் ஸ்ரீலங்கா இராணுவத்தால் மூதூரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்ற காரணத்துக்காகவே தடுத்து வைக்கப்பட்டிருந்தார். (ஒ)

## காங்கேசனுக்கான ரயில் சேவை விஸ்தரிப்பு தாமதம் அடையலாம்

குருநகர், செப்20

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரை தற்போது நடைபெறும் ரயில் சேவையை காங்கேசன்துறை வரை நீடிப்பதில் கால தாமதம் ஏற்படலாம் என்று யாழ் ரயில்வேப்பகுதி பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சிதைந்து கிடக்கும் ரயில் பாதையைத் திருத்துவதற்கான சிலீப்பர் கட்டைகள் இதுவரை வந்துசேராததே இந்தத் தாமதத்துக்குக் காரணம்.

பாதைகளில் புதிதாகப் போடப்பட்டுள்ள சிலீப்பர் கட்டைகள் படிந்து இறுக்கமடைந்த பின்பே இந்த பாதைகளில் 'இன்டர் சிற்றி' கடுகதி ரயில் ஓடக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (இ-51)

## கல்முனையில் கூட்டு ரோந்தில் தமிழ் முஸ்லிம் பிரமுகர்களும்

மட்டக்களப்பு, செப். 20

கல்முனையில் கூட்டு ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ள இந்திய சமாதானப்படை - ஸ்ரீலங்கா பொலீஸாருடன் தமிழ்-முஸ்லிம் பிரமுகர்களும் இணைந்து ஈடுபடுத்தப் பட்டுள்ளார்கள்.

வன்செயல்கள் யாவும் ஓய்ந்து பூரண அமைதி நிலவுகிறது. மக்கள் மத்தியில் காணப்பட்ட பதற்றமும் தணிந்துள்ளது.

கொழும்பிலிருந்து கல்முனை வந்த தொகுதி எம். பி ஜனாப். ஏ. ஆர் மன்சூர் உடனடியாக பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிட்டதோடு மக்களைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்துக் கொண்டார்.

அமைதியை நிலைநாட்டும் நோக்குடன் தமிழ்-முஸ்லிம் சமய, சமூக பிரமுகர்கள், ஸ்ரீலங்கா பொலீஸ், இந்திய படை அதிகாரிகளுடனும் உரையாடினர். (ஒ-21)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப் 20

இன்றுநடைபெறஇருந்த "தமிழ் தந்த தாதாக்கள்" நூல் வெளியீட்டு விழா தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சுடரொளி வெளியீட்டுக் கழகச் செயலாளர் ஐ. தி சம்பந்தன் அறிவித்து உள்ளார். (உ-எ)


பிரித்தானியாவின் அதி உயர்ந்த அரசாங்க விருது பெற்ற

தீந்தை

கிறவுண்

பிரித்தானிய அரசாங்க விருதை மீண்டும் பெற்றுக்கொண்ட பளிச்சிடும் பல வர்ணங்களையும் நிலையான பெயரையும் பெற்ற கிறவுண் தீந்தை உங்களுக்கு உயர்மட்ட அலங்கார தோற்றத்தை உறுதிப்படுத்துகிறது



விலை ரூபா 24/50 ஒரு லீற்.

ஒரு லீட்டரில் 20 சதுர மீட்டர் பூசலாம்

- நீண்டகாலம் நிலைக்கக்கூடிய அலங்கார நிறங்கள் 96.
- அசுத்தம், கறை முதலியவற்றை எளிதாகக் கழுவி சுத்தம் செய்யலாம்.
- பிரித்தானிய தரத்திற்கு அமைவாக உற்பத்தி செய்யப் பட்டது
- தீந்தையின் தரத்தில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் பணம் வாபஸ் பெறப்படும்.

சிலோன் பெயின்ட் இண்டஸ்ட்ரீஸ்
வேடி சுதரின் டிரைவ், இரத்மலானை

50 YEARS Steuart Group

MARSDAN

உன்னத தன்மையையும், மலிவான விலையையும் கொண்டது-கிறவுண்



சவூதி அரேபியா வேலை வாய்ப்புகள்

1. உடனடியான பயணம் OPEN VISA
   1. Drivers 700 SR
   2. Labourers - 500 SR

(வயது: 25 - 45) FLIGHT 25th

★ லிபியா LIBIYA ★

Petroleum Company Cleaners
(4,000 ரூபா இலங்கைப்பணம், சாப்பாடு, தங்குமிடவசதி)

★ சவூதி அரேபியா

| | | | |
|---|---|---|---|
| (1) A/C TECHNICIAN | 3 | 600 SR | 100 SR |
| (2) A/C TECHNICIAN | 10 | 550 SR | 100 SR |
| (3) ELECTRICIAN (Foremen) | 3 | 750 SR | 100 SR |
| (4) TRAILOR DRIVERS | 88 | 700 SR | 100 SR |
| (5) PETROL/DIESEL | 10 | 700 SR | 100 SR |

(வயது: 25 — 45)

★ சவூதி அரேபியா
Hospital Cleaners
சவூதி அரேபியா Hospital Cleaners — Salary 500 SR (With Food)
(வயது: 23 — 4[illegible])

★ பிரயாணம் 10 - 10 - 87

★ சவூதி அரேபியா
(வயது 22 - 44)
(1) Mason (2) Carpenters (3) Drivers
(4) Supervisor (5) Foremen (6) Forklift Operator
(7) Tally Clerk (8) Winch Operator (9) Labourer

★ அபுதாபி
பணிப்பெண்கள் House Maid
(வயது: 18 — 37)

மற்றும் குவைத், பாஹ்ரின், ஓமான், சவூதி, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் பணிப்பெண்கள் உடன் தேவை.

6 படம், 1 முழுக்கலர்ப்படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
T. V. TRAVELS TOURIST
Brown Road, Kokuvil
(STATION முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

ஒன்றையும் வாதினுலாவது வீண் பெருமையினுலாவது செய்யாமல் மனத் தாழ்மையினுலே ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள்.
—பைபிள்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 892/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805, 22078
20.9.1987
த.பெ.இல: - 83

## ஐயகோ! அகிம்சையே!!

இந்தியாவை ஒரு புண்ணிய பூமியாக, சீர்மிகுந்த பண்பாடும், கலாசாரமும், மனித நேயத்துக்கு மதிப்பளிக்கும் மாண்பும் நிறைந்த நாடாக எல்லோரும் கருதியது உண்டு. ஆசியாவிற்குத் தலைமை வகிக்கக் கூடிய தகைமை உள்ள நாடாகவும் அதனை நினைத்தது உண்டு. ஏனைய நாடுகளை நல்வழிப்படுத்திச் செல்லக் கூடிய தகுதி அதற்கு உண்டு எனக் கருதியோரும் எம்மிற்பலர். நீதிக்கும் நியாயத்துக்கும், தர்மத்துக்கும் துணைபோகும் அறவழி நாடு என்று அதனைப் போற்றிப் புகழ்ந்ததும் உண்டு.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில், இந்தியாவை — தமிழகத்தை தமது சொந்த நாடாக ஏற்றிப் போற்றி மதிப்பளித்தவர்கள் மிகப்பலர். இந்தியாவைத் தாய்நாடாகவும் ஈழத்தைச் சேய் நாடாகவும் உவமானப் படுத்தியவர்கள் பலர்.

ஈழத் தமிழர்களுக்கும், தமிழகத்துக்கும் உள்ள கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியங்களும் மொழியால், மதத்தால் உண்டான பிணைப்புகளும் தமிழகத்தை — பாரதத்தை உயர்ந்த இடத்தில் வைத்து நினைக்க ஈழவரைத் தூண்டியது.

இனப்பிரச்சினை விவகாரத்திலகூட - தமிழகமும் - பாரதமும் தங்கள் நலன்களைக் காப்பாற்றி உரிமைகளைப் பெற்றுத் தரும் என்றே ஈழத் தமிழர்கள் நம்பியிருந்தார்கள். ஆனுல் அந்த நம்பிக்கை எல்லாம் வீண் போய்விட்டதாக உணரும் நிலை தோன்றியிருக்கிறது.

''பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு'' என்று பாரதி சொன்னதை அந்த நாட்டின் இப்போதையத் தலைவர்கள் பொய்ப்பித்து வருகிறுர்கள்.

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஓர் இளம் தமிழ் மறவன் ஒரு சொட்டு நீர் தானும் அருந்தாமல் நிமிடத்துக்கு நிமிடம் தனது உயிரைப் போக்கிக் கொண்டிருக்கிறுன். விடுதலைப் புலிகள் இயக்க உயர்மட்டத் தலைவர்களில் ஒருவரான திலீபன் தனது சாகும்வரை உண்ணுவிரதத்தை ஆரம்பித்து நாலகாவது நாள். கடந்த வெள்ளிக்கிழமை அவன் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த வேளை —

மரணத்தின் வாசலில் நின்றிருந்த வேளை-

மிகுதி ஆயுதங்களைத் தருமாறும், சிங்கள யுத்தக் கைதிகளை விடுவிக்குமாறு கோரியும் பாரத நாட்டின் பிரதிநிதிகள் தூது வந்தார்கள்!

என்னே இந்தியாவின் மனித நேயம்! அகிம்சைப் போராட்டத்துக்கு அது அளித்த மதிப்பும் மரியாதையும் தான் எம்மாட்டு!

தன்னை ஒரு பொருட்டாகமதித்து, சக்தியுள்ள நாடாகக் கருதிச் சில கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு வேற்று நாட்டில் உண்ணுவிரதம் நடக்கிறது இது விடயத்தில் தன்னுல் உதவ முடியுமா இல்லையா என்பதை, கோரிக்கைகளை வழங்க முடியுமா அல்லது இயலாதா என்பதைக் கூற மரியாதைக்காகத் தானும் தூதுவர வேண்டியவர்கள் தமக்கு அக்கறை உள்ள விடயத்தைப் பேச வந்தார்கள்!

எதனை எந்த நேரத்தில் பேச வேண்டும் என்று சிறிதளவு பகுத்துணர்வு தானும் இல்லாத சிறுமைத் தனமா இந்தப் பெரிய இந்தியாவுக்கு என்று தமிழர்கள் எல்லோருமே கவலைப்படுகிறுர்கள்! இந்தியா தங்களுக்கு உதவும் என்று அற்ப சொற்ப நம்பிக்கை வைத்திருந்தவர்கள் கூட, இந்தியாவின் கபடவான் தன்மை இதுதானு என்று சந்தேகிக்கிறுர்கள்! நம்பியவனை நட்டாற்றில் தள்ளிவிட்டு தனது சொந்த நலனைப் பேணும் நயவஞ்சக நாடா இந்தியா? என்று மூக்கில் விரல் வைக்கிறுர்கள்!

மதிப்பைக் கொடுத்துத் தான் மதிப்பைப் பெறலாம். மரியாதையைக் காட்டித் தான் அபிமானத்தைப் பெறலாம் என்பதை இந்தியா மறந்தது ஏனே? அகிம்சையை ஆயுதமாகப் பாவித்து பெரும் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தையே அடிபணிய வைத்த மகாத்மா பிறந்த நாடு அகிம்சைக்குத் தரும் மரியாதையும் மதிப்பும் இவ்வளவு தானு? ஐயகோ! அகிம்சையே! உனக்கும் இந்தக் கதியா?

உண்ணுவிரதம் குறித்து இருட்டடிப்புச் செய்து அதில் அக்கறை கொள்ளாதிருக்கும் இந்தியாவின் போக்கு கவலையை மட்டும் தராது. பெரும் மனக்கொதிப்பையும், ஆவேசத்தையும் ஊட்டும் என்பதை இந்தியா மறந்து விடலாகாது.

எந்த நாட்டிலும், எந்தக் கட்டத்திலும் மக்கள் சக்தி மகாவல்லமை படைத்தது என்பதை இந்தியா உணராதிருக்க முடியாது. தமிழ் மக்களின் நலன்களைக் காப்பாற்றும் தனது கடமையில், பொறுப்பில் இருந்து இந்தியா தவறுமானுல் தமிழர்கள் தனக்கு எதிராகத் திரளும் நிலை உருவாகும் என்பதையும் அது தெரிந்து வைத்திருக்கும். அப்படி ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று திட்டமிட்டுத்தான் அகிம்சையை அது அலட்சியப் படுத்துகிறதோ?

---

அமெ- சோவியத் உடன்பாட்டுக்கு

# உலகத் தலைவர்கள் வரவேற்பு

லண்டன், செப். 19

நிலத்தில் இருந்து பாயும் நடுத்தர, குறுகிய தூர அணுவாயுதங்களை ஒழிப்பது சம்பந்தமாக இரண்டு வல்லரசுகளுக்கும் இடையே கொள்கையளவில் உடன்பாடு காணப்பட்டதை உலக நாடுகளின் தலைவர்கள் வரவேற்றனர்.

ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் விடுத்த செய்தியில் அணு ஆயுத யுத்த அழிவில் இருந்து உலகைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் அமெரிக்கா சோவியத் யூனியன் முழுமூச்சுடன் ஈடுபட இந்த உடன்பாடு வழிசமைத்துள்ளது- என்று பாராட்டியுள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜிப்ரி ஹௌ, நேட்டோ அமைப்பின் செயலாளர் நாயகம் கரிஸ்டன் பிரபு ஆகியோரும் வரவேற்றிருக்கின்றனர்.

(இ-எ)

### ★ அழிக்கப்படும் ஏவுகணைகள் விவரம்

வாஷிங்டன், செப். 19

இந்த உடன்பாட்டின் படி அழிக்கப்படவுள்ள ஏவுகணைகள் விவரம் வருமாறு:

★ ஐரோப்பாவில் உள்ள அமெரிக்காவின் 821 ஏவுகணைகள்—

★ சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பாவில் வைத்துள்ள 462 ஏவுகணைகள்.

★ சோவியத் ஆசியாவில் வைத்துள்ள 221ஏவுகணைகள்.

இந்த ஏவுகணைகள் நிலத்தில் இருந்து 300 மைல்தொடக்கம் 3,000 மைல்வரை பாயக்கூடியவை.

இரண்டு நாடுகளிடமும் உள்ள அணு ஆயுதங்களில் இவை மூன்று சதவிதம் மட்டுமே.

(இ-எ)

### மே. ஜெர்மனியிலுள்ள 72 பெர்ஷிங் ஏவுகணைகள் அழிக்கப்படும்

பொன், செப் 19

நடுத்தர அணு ஏவாயுதங்களை அழிப்பது குறித்து அமெரிக்க - சோவியத் இணக்கம் காணப்பட்டிருப்பதால் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே மேற்கு ஜேர்மனியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள 72 பெர்ஷிங் ஏவுகணைகள் அழிக்கப்படும்.

இப்படி மேற்கு ஜேர்மன் அரசு வெள்ளிக்கிழமை அறிவித்தது.

அணுஏவாயுதக்குறைப்புக் குறித்து இரண்டு வல்லரசுகளும் உடன்பாடு ஒன்று காணுவதற்கு 72 பெர்ஷிங் ஏவுகணைகளும் ஒரு முட்டுக்கட்டையாக முன்னர் கருதப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

### சோவியத் ஜனதிபதிக்கு அழைப்பு

ஐ. நா. செப். 19

ஐ நா பொதுச்சபைக் கூட்டத்தில் பேசும்படி சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐ நா. சபைத் தலைவர் பீட்டர் புளோரின் இந்த அழைப்பை கடந்த வெள்ளிக்கிழமை விடுத்தார்.

(இ-எ)

### கென்யாவுக்கு சமாதானத் தூதர் விருது

நைரோபி, செப். 19

ஐ. நாவின் 'சமாதானத்தூதர் விருது' கென்யாவுக்கு வழங்கப்படவுள்ளது.

உலகில் சமாதான வளர்ச்சிக்குக் கூடுதல் நிமிடங்கள் உழைத்ததற்காக இவ் விருது வழங்கப்படுகின்றது.

4 கோடி 92 லட்சத்து 50 ஆயிரத்து 220 நிமிடங்களைக் கடந்த ஆண்டு கென்ய மக்கள் சமாதானத்துக்காகச் செலவழித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் சர்வதேச சமாதான ஆண்டைக் கொண்டாட நைரோபியில் இயங்கும் ராஜயோக நிலையம் 'சமாதானத்துக்காக 10 லட்சம் நிமிடங்கள்' இயக்கத்தை நடத்தியது.

(இ-எ)

### அல்பேனியா மே. ஜேர்மன் ராஜீய உறவு

பொன், செப் 19

அல்பேனியா, மேற்கு ஜேர்மனியுடன் ராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்துள்ளது.

இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின்னர் அல்பேனியா மேற்கு ஜேர்மனி இராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

அல்பேனியா, ஒரு கம்யூனிஸ்ட் நாடு.

[இ-எ]

---

இந்திய ரயில்களில்

### முதலாம் வகுப்பு பெட்டிகள் இனி இருக்க மாட்டா!

மைசூர், செப். 19

இந்திய ரயில்களில் இனி முதலாம் வகுப்புப் பெட்டிகள் இருக்கா.

இருக்கும் முதலாம் வகுப்புப்பெட்டிகள் படிப்படியாக அகற்றப்பட்டுவிடும்.

இத்தகவலை இந்திய ரயில்வேப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

முதலாம் வகுப்புப் பெட்டிகளை உற்பத்தி செய்வது ரயில்வே தொழிற்சாலைகளில் நிறுத்தப்பட்டுவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-எ)

---

வெளி உலகில்

### மோதல்களிலிருந்து தமிழரைக் காப்பாற்றும் நிலையில் ராஜீவ் காந்தி

பண்ருட்டி கூறுகிறுர்

திருச்சி, செப் 19

சிங்களவரிடம் இருந்து தமிழரைப் பிரதமர் ராஜீவ்காந்தி காப்பாற்றினுர், இப்போது போராளிகளின் மோதல்களில் இருந்து தமிழர்களைப் பிரதமர் காப்பாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது

இப்படித் தமிழ்நாடு உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

திருச்சியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய போது அமைச்சர் இக்கருத்தை வெளியிட்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் ஆட்சியை அமைக்க தமிழர் அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

---

# சிங்களக் குடியேற்றத்தினுல் முஸ்லிம்களின் விகிதாசாரமும் குறையும்

## பரம்பரையாக வாழ்ந்தவர் தலைவிதியைக் குடியேறியவர்கள் நிர்ணயிக்க இடம் தரலாமா?

கருத்துக் கணிப்புப் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன.

முதலில் இணைந்த மாநிலசபை; ஆண்டு ஒன்று கழிந்து கருத்துக் கணிப்பு.

அந்தக் கருத்துக் கணிப்பு, தொடர்ந்து இணைந்த மாநிலத்துடன் இணைந்து இருப்பதா என்பது பற்றி கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படும்.

இப்படித்தான் ஒப்பந்தத்தில் கூறப்பட்டு உள்ளது.

கருத்துக்கணிப்பு நடத்தித்தான் இணைப்புப் பற்றி முடிவு செய்ய வேண்டும்.

இப்படித் தர்மிஷ்டர் பிடிவாதமாக முன்னர் இருந்து வந்தார்

'பெரிய அண்ணு'வின் பிடிவாதம் கூடவே, இந்தப் பிடிவாதம் தளர்ந்தது. ''முதலில் இணைப்பு; பின்னர் துண்டிப்புக் குறித்துக் கருத்துக் கணிப்பு'' —இதற்கு தர்மிஷ்டர் இணங்க வேண்டியதாயிற்று.

ஆனுல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்தில் இருந்தே கருத்துக் கணிப்புப் பற்றி கொழும்புத் தலைவர்கள் பல கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சிலசமயம் பார்த்தால் விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற மாதிரியான காரணங்களோ என்றும் எண்ண வேண்டியுள்ளது.

''இணைப்பை இன்னும் எதிர்ப்பேன்; கருத்துக் கணிப்பின்போது அதை எதிர்த்துப்பிரசாரம்செய்வேன்'' — இப்படி தர்மிஷ்டர் ஒப்பந்தம் கைச்சாத்தான அன்றே கூறிவிட்டார்.

அவரின் அருகில் அப்போது பிரதமர் ராஜீவ் காந்தியும் அமர்ந்துஇருந்தார்.

ஏன் கருத்துக் கணிப்பை எதிர்க்கின்றீர்கள்? — இப்படிக் கேட்கப்பட்டது.

### தர்மிஷ்டரின் தடுமாற்றம்!

''கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களும் சிங்களவரும் இணைப்பை எதிர்க்கின்றுர்கள். அதனுல் தான் நானும் எதிர்க்கின்றேன்'' — இப்படித் தர்மிஷ்டர் பதிலளித்தார்.

''அவர்கள் ஆதரித்தால் நானும் ஆதரிப்பேன். அதற்காகத்தான் கருத்துக் கணிப்பு'' — என்றும் தர்மிஷ்டர் சொன்னுர்.

1957 இல் இணைப்பை எதிர்த்தபோது இந்தக் கருத்துக் கணிப்புப்பற்றி எல்லாம் தர்மிஷ்டர் கூறவில்லை.

அன்று கிழக்கு மாகாணத்தின் சகல நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் தமிழரசுக்கட்சியில் இருந்தனர்.

முஸ்லிம்களும் தமிழரசுக் கட்சியில் எம். பிக்களாக வெற்றியீட்டிய காலம் அது.

### சிங்கள எம். பி. ஒருவரும் இல்லை

கிழக்கு மாகாணத்தில் சேருவிலவும் இல்லை; திகாமடுல்லவும் இல்லை.

ஒரு சிங்கள எம். பி. தானும் கிழக்கு மாகாணத்தில் இருந்து அப்போது தெரிவாகவில்லை.

காரணம் சிங்களவர் எண்ணிக்கை ஒரு எம்.பியைத் தானும் தெரிவு செய்யக்கூடிய அளவு அன்று இருக்கவில்லை என்பதே.

''முஸ்லிம்கள் இணைப்பை எதிர்க்கின்றுர்கள். அதனுல்தான் இணைப்பை நான் எதிர்க்கின்றேன்'' — என்று தர்மிஷ்டர் அன்று சொல்லத் துணியவில்லை.

இணைப்பை ஆதரித்தால் தமிழர் தாயகம் அமைந்துவிடும் - இப்படி தர்மிஷ்டர் பிரசாரம் செய்து பண்டா-செல்வா ஒப்பந்தத்தை உடைத்தார்.

இதில் இருந்து ஓர் உண்மை தெளிவாகப் புரிகின்றது.

1957இல் தர்மிஷ்டர் முஸ்லிம்களைத் தமிழ் பேசும் இனமாகக் கருதிக்கொண்டார் என்பதே அந்த உண்மை.

இல்லையேல், முஸ்லிம்கள் இணைப்புக்கு எதிர்ப்பு என்று கூறியிருக்க வேண்டும். கூறவில்லையே.

### சிங்களக் குடியேற்றம்

1957 இல் ஒப்பந்தம் கிழிக்கப்பட்ட பின்னர் தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் கிழக்கு மாகாணத்தில் முழுமூச்சாக நடைபெறத் தொடங்கியது.

முஸ்லிம், தமிழர்களின் பாரம்பரியக் காணிகள் பறிபோகத் தொடங்கின.

சிங்களவரின் சனத்தொகை பல மடங்காக அதிகரிக்கத் தொடங்கியது.

1983இல் தமிழர் உரிமைப் போராட்டம் வீறுகொண்டெழுந்தது.

அதைத் தொடர்ந்து தமிழீழம் கோரிக்கை எழுந்தது.

தமிழீழத்துக்கு ஒரு மாற்றுத் தீர்வு என்றுல் அது வடக்கு, கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியாகவே அமைய வேண்டும் என்ற கருத்தும் பிறந்தது.

அதைத் தொடர்ந்து தான் 'கருத்துக் கணிப்பு' என்ற சொற்றெடர் தர்மிஷ்டர் வாயினுள் நுழைந்தது

''முஸ்லிமும் சிங்களவரும் வடக்குடன் கிழக்கு இணைவதை எதிர்க்கின்றனர். அப்படி இணைப்பது என்றுல் கிழக்கில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும்'' — இப்படிக் காரணம் கூறத் தொடங்கினுர் தர்மிஷ்டர்.

### முஸ்லிம்களைத் துணைக்கு இழுக்கும் தர்மிஷ்டர்

கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் எண்ணிக்கை 30சத வீதத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் போதுதான் 'கருத்துக் கணிப்பு'க்கு ஆதரவு தேட முஸ்லிம் மக்களை துணைக்கு இழுக்கின்றுர் தர்மிஷ்டர்.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் சிங்களக் குடியேற்றம் புதிய வேகத்தில் தொடர்ந்து நடைபெறுகின்றது.

கருத்துக் கணிப்புக்கு முஸ்லிம்களின் துணையை நாடும் தர்மிஷ்டர் கூட்டம், புதிய குடியேற்றங்களில் சிங்களவர்களை மட்டுமே குடியமர்த்துகின்றது

வடக்கு, கிழக்கு இணைப்பினுல் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரம் 34சத வீதத்தில் இருந்து 17சத வீதமாக விழுந்துவிடும் என்று ஒரு பக்கம் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது

ஆனுல் கிழக்கில் நடைபெறும் புதிய சிங்களக் குடியேற்றங்களினுல் தமிழர் விகிதாசாரம் மட்டுமல்ல, முஸ்லிம்களின் விகிதாசாரமும் வீழ்ச்சி அடைந்து விடும் என்பது உணரப்படுவதாக இல்லை.

சிங்களப்பேரினவாதத்துக்குச் சிறுபான்மையினர் என்பது 'அலர்ஜி' தான்.

அது தமிழர் என்றுலும் சரி, முஸ்லிம் என்றுலும் சரி.

வடக்கு, கிழக்கு இணைந்த மாநிலத்தில் தமிழரின் நிர்வாகத்தின் கீழ் சிறுபான்மையினராக முஸ்லிமும் சிங்களவரும் வாழ்வதா?

இப்படித்தான் இன்று சிங்களப் பேரினவாதம் குரல் எழுப்பி வருகின்றது.

சொல்லப்பட்டபடி கருத்துக் கணிப்புநடந்து இணைப்புக்கு எதிராக வாக்களிக்கப்பட்டால்... கிழக்கின் எதிர்காலம் எப்படி அமையும்?

### முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்

இதை முஸ்லிம்மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

காட்டாற்று வெள்ளம் போல் வந்துசேரும் சிங்களக் குடியேற்றத்துக்கு முன்னுல் முஸ்லிம் மக்களின் தற்போதைய விகிதாசாரம் தொடர்ந்து நிலைக்குமா?

மொழியால் ஒன்றுபட்ட இனம் ஒன்றின் ஆதிக்கத்தின்கீழ் வரக்கூடாது என்ற மாயைக்கு ஆட்பட்டு, மொழியால் வேறுபட்ட இனம் ஒன்றின் ஆதிக்கத்துக்குள் சிக்குவதன்முலம் சொந்த மொழியையும் பாரம்பரிய மண்ணையும் காப்பாற்ற முடியுமா?

ஓர் சிறுபான்மை இனத்தின் பாரம்பரிய மண்ணைப் பறித்தெடுக்கக் கங்கணம் கட்டிச் செயல்படும் பெரிய இனம், இன்னெரு சிறுபான்மையினத்தின் பாரம்பரிய மண்ணைக் காப்பாற்றிக்கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமான காரியமா?

சொந்த மண்ணைக் காப்பாற்ற வீரப் போராட்டத்தை நடத்தும் ஒரு சிறுபான்மை இனத்துடன் சேர்ந்து தனக்குரிய ஜீவாதார உரிமையை பாரம்பரிய மண்ணைப் பாதுகாப்பது சிறந்தது அல்லவா!

முஸ்லிம் சமுதாயத்தின் முன் வைக்கப்பட்டுள்ளகேள்விகள் இவை.

முதலில் வரப்போவது இணைந்த மாநிலசபை; பின்னர் வரப்போவது தான் கருத்துக்கணிப்பு.

இணைந்த மாநிலசபையில், தமிழரும் முஸ்லிமும் ஒன்று சேர்ந்து, பின்னர் வரப்போகும் கருத்துக் கணிப்பை எந்த ஆண்டு சனத்தொகை அடிப்படையில் நடத்துவது என்பதைத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

---

உள்ளும் புறமும் — குருமணி

---

## ஞானக்கதிர்

ஞாயிறு தோறும் வெளிவரும் ஞானக்கதிர் கிறிஸ்தவக் கட்டுரை இடமின்மை காரணமாக இன்று வெளிவரவில்லை.

---



### பொய்யாமொழி

**குறள்:**

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

**பொருள்:**

அரசன் முறைதவறி நாட்டை ஆட்சி செய்வானுனல், அந்த நாட்டில் பருவ மழை காலம் தவறி மழை பெய்யாமல் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமான விலைகளில்
நவீன ஜவுளி ரகங்கள்
உங்கள் தேவைகளுக்குரிய நவீன
ரகங்களைத் தேர்ந்தெடுக்க
இன்றே வருகை தாருங்கள்

**மயூரா சென்ரர்**
13 B நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

20 09 1987 ஞாயிற்றுக்கிழமை



சிறந்த றெடிமேட் ஆடைகள்
நீங்கள் விரும்பும் கண்கவர்
வண்ணங்களின் நவீன ரக
றெடிமேட்
உடைகளைத் தேர்ந்தெடுக்க
சிறந்த இடம்

**மயூரா சென்ரர்**
13 B நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


# ஒப்பந்தத்தை உறுதியுடன் ஆதரிப்பேன்

கொழும்பு, செப். 20
★ ஒப்பந்தத்தை உறுதியுடன் ஆதரிப்பேன்
★ மாகாண சபைத் திட்டத்தை அமுல்நடத்தியே தீருவேன்
★ வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையம் இராணுவ சேவைக்குப் பயன்படுத்துவதை எதிர்ப்பேன்.
★ தென் இலங்கைப் பயங்கரவாதத்தை இரண்டு மாதங்களில் அடக்குவேன்
★ இந்தியாவின் பகைமை நாடுகளுடன் தொடர்பு கொள்ளும்

## தோட்டத்துரைமார் மாநாட்டில் ஜனாதிபதி

முன்னர் பிரதமர் காந்தியுடன் அதுபற்றி கலந்தாலோசிப்பதில் தவறு ஏதுமில்லை.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கைத் தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் 51ஆவது ஆண்டு மகாநாட்டில கலந்து கொண்டு ஜனாதிபதி பேசினார்.

அப்போது அவர் மேலும் சொன்னதாவது:

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாது இருப்பின் தினமும் இலங்கைப் பிரஜைகள் இறந்து கொண்டே இருப்பர்

நான் ஓர் அஹிம்சைவாதி. யுத்தம் நடத்துவதற்காக நான் பதவி ஏற்கவில்லை. 1983 இல் இருந்து யுத்தம்நடந்தது

ஒப்பந்தம் இணைப்பு, கடிதங்கள் இவைதான் இரு நாடுகளுக்கும் இடையே உறவாகின

கடிதத்தில் திருமலை எண்ணைக் குதங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இரண்டு நாடுகளும் அவற்றை நிர்வகிக்கும்

திரு. ராஜீவ் காந்தி நண்பனுகவே இலங்கையோடு சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டார்.

இப்படி திரு ஜெயவர்த்தன தெரிவித்தார். (இ-எ)

## தமிழர் விவரம் சேகரிப்பு

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழரின் விவரங்களைத் தமிழ்நாடு பொலீஸார் சேகரித்து வருகின்றனர்

சகல நகரங்களிலும் வாழும் இலங்கைத் தமிழரின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

விசேடமாக திருநெல்வேலி மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று இவ்விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன (இ-எ)

## இந்தியாவின் வேண்டு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ம்பிலிருந்து இங்குவந்த இந்திய பிரதித் தூதர் திரு. சென்னை, பலாலியிலுள்ள இந்திய சமாதானப்படை தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர்

நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் 4 மணிவரை நடைபெற்றன

இந்தியாவுக்கு எதிராகவும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராகவும், இந்திய சமாதானப்படைக்கு எதிராகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் விஷமத்தனமான பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாக திரு சென் குற்றம் சாட்டினர்.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து இந்தியா மீது அழுத்தங்களை பிரயோகிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

எமது போராட்டம் இந்திய அரசுக்கு எதிரானது அல்லவென்றும், எமது உரிமைகளுக்காக, எமது சுதந்திரத்திற்காக, எமது பாதுகாப்பிற்காக நடத்தப்படும் நியாயபூர்வமான போராட்டம் என்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இலங்கை அரசு தனது நிர்வாக அமைப்பை மீண்டும் தமிழீழத்தில் நிலை நிறுத்துவதற்கு இந்திய அரசு துணை போவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டினர்.

தற்காலிக நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் ஏற்படும் தாமதத்திற்கு விடுதலைப் புலிகளே காரணமென திரு. சென் குற்றஞ் சாட்டினர். இதனை மறுத்த புலிகளின் பிரதிநிதிகள் பாரதப் பிரதமர் கொடுத்த வாக்குறுதியின்படி நடந்து கொள்ளவில்லையெனக் கூறினர்கள்

தற்கு உதாரணமாக ஸ்ரீ லங்கா பொலீஸ் அமைப்பு தமிழ்ப் பகுதியில் உருவாக்கப்படுவதையும், ஸ்ரீ லங்கா பொலீஸாருடன் சேர்ந்து இந்திய சமாதானப்படையினர் தமிழ் போராளிகளை வேட்டையாடுவதையும் விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டினர்,

ஸ்ரீ லங்கா பொலீஸ் நிலையங்களைத் திறந்து, சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளை பொறுப்பேற்க வேண்டுமென இந்திய அரசே இலங்கையை வேண்டிக்கொண்டுள்ளதாக திரு. சென் தெரிவித்தார்,

இலங்கை அரசு தனது பொலீஸ் நிர்வாக இயந்திரத்தை தமிழ் மண்ணில் மீண்டும் ஸ்தாபிப்பதை விடுதலைப் புலிகள் ஒருபொழுதும் அனுமதிக்கமாட்டார்கள் என இந்தியத் தூதரிடம் இடித்துரைக்கப்பட்டது

இதனை அடுத்து புலிகள் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் பற்றியும் விரிவாகப்பேசப்பட்டது. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவது பற்றி எந்த விதமான உருப்படியான உறுதிப்பாடுகளையும் திரு. சென் கொடுக்கவில்லை. பதிலாக, உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டு, இந்தியாவுடன் ஒத்துழைத்து, ஒப்பந்தத்தை அமுல் நடத்த உதவுமாறு கேட்டுக் கொண்டார்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## டாக்ஸி ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப் 20
யாழ் நகரில் நேற்று டாக்ஸி ஊர்வலம் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாண டாக்ஸி உரிமையாளர்கள் இப்போராட்டத்தை நடத்தினர். (இ-10)

## குருநகரில் இன்று அடையாள உண்ணாவிரதம்

குருநகர், செப் 20
திரு. இ. திலீபனின் போராட்டத்தை யொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை குருநகர் மக்களால் குருநகர் சனசமூக நிலைய முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற உள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் சனசமூக நிலைய முன்றலில் ஆரம்பமாகும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் குருநகர் மக்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று குருநகரில் உள்ள வர்த்தக நிலையங்களையும், தொழிற்சாலைகளையும் மூடியும், கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாமலும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் வேண்டப்பட்டுள்ளது

### முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், செப் 20
திலீபனின் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆதரித்தும், அவர் முன்வைத்துள்ள ஐந்து அம்சக் கோரிக்கைகளைவலியுறுத்தியும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

## இறந்தோர். . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கண்ட 14 பேரும் அன்பவழிபுரத்தைச் சேர்ந்தவர்கள்.

பாரதிபுரத்தைச் சேர்ந்த காயம் அடைந்த மற்றும் மூவர்வருமாறு:-
1 எஸ் தம்பிராசா
2 எஸ். ஜெயகுமார்
3. தோமஸ் டானியல்

இத் தாலியன் சாம்ப் என்ற இடத்தில் சிங்கள காடையர்களால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழர் 1. க யோகேஸ்வரன்-கந்திநகர். (இ)

## சிங்கள---

(5-ம் பக்கத்தொடர்ச்சி)
தீர்மானிக்க வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் குடியேற்றப்பட்டவர்கள், கிழக்கு மாகாணத்தில் பரம்பரையாக வாழ்ந்துவந்த தமிழ், முஸ்லிம்களின் நிலையினை தீர்மானிக்க அனுமதிக்கலாமா?

கருத்துக்கணிப்பொன்று நடந்தால்(?) இவை எல்லாம் கருத்துக் கொடுத்துக் கொள்ளப்படவேண்டியவை ஆகும்.

## இயக்க-----

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
எமது விடிவிற்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்ற வகையில் ஒத்த கருத்துடையவர்கள் ஆனல் இவ் ஆயுதங்கள் பொது எதிரிக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்கள்

எனவே தான் பிரச்சினைகள் ஏதும் எவருக்கும் இருந்தால் நாம் எப்போதும் நேரில் பேசித் தீர்க்கத் தயாராக இருக்கின்றோம்

அதனை விடுத்து மக்களிடம் செல்லும் தோழர்களை சுடத்தி எமக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுத்து எம்மைத் திசை திருப்பும் நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடக்கூடாது என்பதே எமது நிலை.

தமிழ் பேசும் மக்கள் முன்னுல் உள்ள பெரும் துன்பங்களை கணக்கிலெடுக்காமலும் ஒன்றிணையாமலும், தனிப்பட்ட பாதையில் பழிவாங்கும் வெறி, காழ்ப்புணர்ச்சி, பயம் போன்ற உணர்ச்சிகள் காரணமாக இலக்குத் தப்பி, பாதை மாறிப் பயணம் செய்து நாசமடைந்து மக்களிடமிருந்து அந்நியப்பட வேண்டாம் எனவும் ஈரோஸ் வேண்டுகின்றது

சுயநலம் கருதிச்செயல்படும் சக்திகளின் போக்கிற்குத் துணை போகாமல் தமிழ் பேசும் மக்களின் நிரந்தர நலனுக்கான நீண்ட காலப் போராட்டத்தைக் கருத்தில் கொண்டு சிந்தித்துச் செயல்படுமாறு அனைத்து தமிழ் பேசும் மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுகின்றோம்.

-இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பேச்சுக்களில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி]
டுக்கான வாசகத்தைத் தயாரிப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந் நாட்டுக் குழுக்களும் (திங்கட் கிழமை) நாளை மீண்டும் கூடிப் பேச்சுக்களை நடத்தும். (இ-எ)

### உதயன் சஞ்சீவி சந்தா விவரம்

உள்நாடு

| காலம் | உதயன் ரூ ச | சஞ்சீவி ரூ ச | உதயனும் சஞ்சீவியும் ரூ ச |
|---|---|---|---|
| 1 வருடம் | 470·00 | 130·00 | 600·00 |
| 6 மாதம் | 235·00 | 65.00 | 300·00 |
| 3 மாதம் | 117·50 | 32 50 | 150·00 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | உதயன், சஞ்சீவி ரூ ச | அஞ்சல் செலவு ரூ ச | மொத்தம் ரூ ச |
|---|---|---|---|
| 1 வருடம் | 600·00 | 182·50 | 782·50 |
| 6 மாதம் | 300 00 | 91·25 | 391 25 |
| 3 மாதம் | 150 00 | 45 65 | 195 5 |

## 6 மணி. . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]
மலையில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து வெள்ளி மாலை ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது

சனிக்கிழமை முழுவதும் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தது. (இ-எ)


★ தயா மரக்காலை ★
THAYA TIMBER DEPOT
(Regd. No. J 59)

Prop:- K. KANDASAMY
K. K. S Road,
CHUNNAKAM.

நீங்கள் விரும்பிய வீட்டுத்தளபாடங்கள், பலவித பலரக மரவகைகளுக்கும் மற்றும் வீட்டுத் தேவைக்குரிய தளபாடப் பொருட்கள் ஒப்பந்த அடிப்படையில் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.

★ இன்றே விஜயம் செய்யுங்கள் ★


## மோதல்களுக்கு . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
களைப் புரிந்த கிரிமினல்களை அரசியல் தலைவர்களாகத் தூக்கி வைப்பதில் இந்திய உளவு ஏஜென்ஸி ஈடுபட்டு உள்ளது.

நாம் ஆயுதங்களை ஒப்படைத்த போது நிராயுத பாணிகளான எமது இயக்கத்தினரைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய அரசிடம் ஒப்படைத்தோம்.

நவீன ஆயுதங்களுடன் தமிழ்ப் பகுதிகளுக்கு மீண்டும் வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அப்பாவிப் பொதுமக்களுக்கும் எதிராக வன்செயல்களை திறீஸ்டார், ஈ என் டி எல். எப் அமைப்புக்கள் கட்டவிழ்த்து விடும்வரை அமைதி நிலவியது

ஆயுத ஒப்படைப்பில் இந்தியாவுடன் ஒத்துழைத்து வந்த நெருக்கடியான தருணத்தில் இக் குழுக்களுக்குப் பயிற்சி, ஆயுதம் கொடுத்து தமிழ் ஈழத்துக்கு 'றோ' அனுப்பி வைத்தது.

தங்களுக்குள் இக்குழுக்கள்மோதிக்கொண்டன பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள இயக்கத்துக்கு எதிராக பழிவாங்கும் கொலைகளைச் செய்யத் தொடங்கின

அதன்மூலம் தமிழ்ப் பகுதியில் சமாதானத்தைக்குழப்பி வன்செயலையும் இரத்த ஆறையும் அவை ஓடச்செய்தன

இந்திய அரசின் ஒரு கருவி 'றோ' அண்மைக் கால வன்செயலுக்கு 'றோ'-வையே நாம் குற்றஞ் சாட்டுகின்றோம். 'றோ'வின் குறிக்கோள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை உடல ரீதியாக அழித்து விடுவதே.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பித்துள்ள பொதுசன இயக்கம்,சாகும்வரை உண்ணாவிரதம் ஆகியன அடங்கிய அகிம்சைப்போராட்டத்தின் நோக்கத்தை இந்திய வெளியுறவு அமைச்சு தவறுக விளங்கிக்கொண்டுள்ளது

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்க அமுல் நடத்தப்பட்டிருக்கவேண்டிய நீதியான நியாயமான கோரிக்கைகளைத்தான் நாம் முன் வைத்துள்ளோம்.

நாம் சாந்திய ரீதியான அகிம்சைப் போராட்டத்தையே நடத்துகின்றோம்

இந்திய ஆத்மீக பாரம் பரியத்தில் எழுந்தது இந்த அகிம்சை போராட்டம்.

எமது உண்மையான குறைபாடுகளை அதன் மூலம் தெளிவாகத் தெரிவிக்கின்றோம்.

எமது போராட்டம் இந்தியாவுக்கு எதிரான இயக்கம் அல்ல; ஒப்பந்தத்துக்கும் எதிரானது அல்ல எமது சுதந்திரம், கௌரவம், பாதுகாப்பு ஆகியவற்றை வென்றெடுக்கவே எமது போராட்டம் நடைபெறுகின்றது.

எமது போராட்டம் நீதியானதும் சட்டபூர்வமானதும் என்பதால்தான் தமிழ்மக்கள் அனைவரும் எம்பின்னுல் அணிதிரண்டுள்ளனர்

இப்படி திரு பிரபாகரன் தனது அறிக்கையில் தெரிவித்தார். (இ-எ)

## கரடியிடம் சிக்கிய - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தெரிய வந்தது

இந்த வேளை திடீரென கரடிக் கூட்டம் ஒன்று இவர்கள் மூவரையும் எதிர் கொண்டது அந்தக் கூட்டத்தில் இருந்த தாய்க் கரடி ஒன்று மிகவும் ஆவேசத்துடன் முன்னுல் இவர்களை நோக்கி வந்தது.

மற்றைய இருவரும் மரங்களில் ஏறிக் கொண்டனர். பாலேந்திரன் கரடிக் கூட்டத்திடம் மாட்டிக் கொண்டு விட்டார்.

இவரை ஆவேசத்துடன் வந்த கரடியும் இன்னும் ஒரு கரடிக் குட்டியும் ஒரே சமயத்தில் தாக்கின கீழே விழுந்தவுடன் கரடிகள் இரண்டும் இவர் மீது ஏறி அமர்ந்து பலமாகத் தாக்கி இரண்டு கண்களையும் பறித்து எடுத்து விட்டன.

அவரின் மண்டை ஓட்டின் பெரும் பகுதியும் இரண்டு காதுகளும் சேதமாக்கப் பட்டுள்ளன.

இப்போது ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் இவர் சேர்க்கப் பட்டிருக்கிறார்

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் சமம் செய்பவராவர். (ஓ)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்)லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்,யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்ட திகதி: 20-09-1987.
Printed and Published by New Uthayan Publications Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on September 20, 1987


## 1988 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகைமைச் சான்றிதழ் வழங்குதல் (Issue of Fitness Certificates 1988)

1988 ஆம் ஆண்டுக்குரிய வாகனத் தகைமைச் சான்றிதழ்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னூர், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள மோட்டார் லொறி பஸ்ஆகிய வாகனங்களில் 01-10-1987 முதல் வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிப்புரையின் பிரகாரம் பின்வரும் எமது சாலைகளில் வாகனங்கள் பரிசோதனை செய்யப்படும்.

(1) கேண்டில் (2) காரைநகர்
(3) பருத்தித்துறை (4) கிளிநொச்சி
(5) முல்லைத்தீவு (6) வவுனியா
(7) மன்னூர்

வாகன உரிமையாளர்கள் வாகனச் சான்றிதழ் பற்றிய மேலதிக விபரங்களுக்கு திரு க. தனபாலசிங்கம், பொதுஜனத் தொடர்பு அதிகாரி, வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமை அலுவலகம், பலாலி வீதி கோண்டாவில் அல்லது சாலை முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.

சி. கனகரத்தினம்,
தலைவர்/நகவுடை அதிகாரி,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை.

## நீத்தார் பட்டியல்

### சபாபதி ஈஸ்வரதாஸ்

புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ''செல்லஸ்தான்'' கந்தரோடை, சுன்னுகத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், முன்னுள் ஓய்வுபெற்ற அரசவிகிதரும், இன்னுள் உதயன்-சஞ்சீவி நிறுவன ஊழியரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சாமிளா (ராமநாதன் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா-பழைய மாணவி), சுரேஷ் (யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய சபாபதி ஈஸ்வரதாஸ் 19-09-87 இல் காலமாகிவிட்டார்.

அன்னரின் பூதவுடல் சுன்னுகம் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக சுன்னுகம் பொது மயானத்துக்கு 21-09 87 திங்கள் முற்பகல் 10 00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்

தகவல்: க. கெங்கேஸ்வரன் (மைத்துனர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org